சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – கொரோனா தொற்று பரவல் – ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டை தாரர்களுக்கு முகக் கவசம் வழங்குதல் – முகக் கவசம் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நியாய விலைக் கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.27,88,534/– தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து கூட்டுறவுச் சங்களின் பதிவாளர், சென்னை அவர்களுக்கு வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.2) துறை

அரசாணை (நிலை) எண்.761 நாள் 10.12.2020

சார்வரி, கார்த்திகை 25,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.25 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஏ2)துறை, நாள்.04.03.2020.
2. அரசாணை எண். 358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 16.07.2020.
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் கடித எண். ந.க. எண். 18617 / 2020 / பொ.வி.தி பொது 2, நாள் 03.08.2020.
4. அரசாணை (நிலை) எண். 423, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.–2) துறை, நாள் 14.08.2020.
5. அரசாணை (நிலை) எண். 494, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.–2) துறை, நாள் 16.09.2020.
6. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் இ.பே. 1 / 2212 / 2020, நாள். 26.09.2020.
7. கூட்டுறவுச் சங்களின் பதிவாளர், சென்னை அவர்களின் கடித எண். ந.க. எண். 18617 / 2020 / பொ.வி.தி பொது 2, நாள் 07.10.2020.
8. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கடித எண்.இ.பே.1/2212/2020, நாள் 11.11.2020.

*******

**ஆணை:**

பார்வை 8–இல் காணும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில் மத்திய அரசின் கொரோனா வைரஸ் தடுப்பு மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில், முககவசம் அணிந்தால் கொரோனா வைரஸ் நோய் பரவலை குறைக்க இயலும் என்பதனால் அனைத்து பொது இடங்கள் மற்றும் பணியிடங்களிலும், பிற இடங்களுக்கு பயணிக்கும் போதும் பொதுமக்கள் அனைவரும் கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

முதற்கட்டமாக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) வசிக்கும் 69.09 இலட்சம் குடும்பங்களுக்கு 4.43 கோடி விலையில்லா தரமான மறு பயன்பாட்டு முகக்கவசங்கள் ரூ.30.06 கோடி மதிப்பீட்டில் வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து முகக்கவசங்கள் வெளிப்படையாக கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முகக்கவசம் ஒன்றுக்கு ரூ.6.45 + 5 சதவீதம் GST என்ற குறைவான விலைப்புள்ளியினை சமர்ப்பித்த நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டடு, முகக்கவசங்கள் தயாரித்து வழங்க ஆணைகள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில், 27.07.2020 அன்று பொதுமக்களுக்கு விலையில்லா தரமான மறு பயன்பாட்டு முகக்கவசங்கள் வழங்கும் நிகழ்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து நியாய விலைக்கடைகள் மூலம் நகரப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு முகக்கவசங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முகக் கவசங்கள் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நியாயவிலைக் கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், அவர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 69,09,385 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் ரூ.34,54,692.50/- வழங்க பார்வை 5-ல் காணும் அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் தனது கடிதத்தில் கூட்டுறவுச் சங்களின் பதிவாளர், சென்னை அவர்கள், நோய் தொற்றுள்ள காலகட்டத்திலும் தங்களுடைய உயிருக்கு ஊறு நேரும் எனத்தெரிந்தும் எவ்வித இடர்பாடுகள் இருந்தாலும் நியாய விலை கடைகள் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் சிறப்பு திட்டமான பொது மக்களுக்கு விலையில்லா முகக்கவசங்கள் அடித்தட்டு மக்களுக்கு சென்று அடையும் வண்ணம், சிறப்புடன் செயல்படும் நியாய விலைகடை பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 69,09,385 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் ரூ.34,54,692.50/-ஐ (முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று தொன்னூற்று இரண்டு ரூபாய் மற்றும் ஐம்பது பைசா மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டது என்றும் தெரிவித்து, தற்போது ஊரகப் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 1,20,79,528 குடும்ப அட்டைதாரர்களுக்கு 7,80,09,000 முகக் கவசங்கள் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நியாயவிலைக் கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கும் சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 1,20,79,528 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் **ரூ.60,39,764/-** வழங்குமாறு கோரியுள்ளார். கூட்டுறவுச் சங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துரு தொடர்பாக அரசால் பரிசீலனை செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஊரகப் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 1,20,79,528 குடும்ப அட்டைதாரர்களுக்கு மொத்தம் 7,80,09,000 முகக் கவசங்கள் விநியோகம் செய்ய பார்வை 4-ல் காணும் அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. எனினும், மேற்சொன்ன 7,80,09,000 முகக் கவசங்களில், முதற்கட்டமாக 25 விழுக்காடு முகக்கவசங்கள் அதாவது 1,99,14,046 முகக்கவசங்களும், இரண்டாம் கட்டமாக 25 விழுக்காடு முகக்கவசங்கள் அதாவது 1,90,90,033 முகக்கவசங்களும் ஆக மொத்தம் 3,90,04,079 முகக்கவசங்கள் நியாய விலைக்கடைகள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய முடிவெடுக்கப்பட்டு, முகக்கவசங்கள் தயாரித்து வழங்க ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஆணை வழங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக 25 விழுக்காடு முகக்கவசங்கள் அதாவது

1,99,14,046 முகக்கவசங்கள் தயாரித்து வழங்க ஆணை வழங்கப்பட்ட நிறுவனங்களுள், சேலம், கடலூர், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு உரிய நேரத்தில் முகக்கவசங்கள் தயாரித்து வழங்காத காரணத்தாலும், மேற்சொன்ன மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் கொரோனா நோய்த் தொற்று குறைந்து வந்த காரணத்தினாலும், மேற்சொன்ன மாவட்டங்களின் ஊரகப்பகுதிகளில் முதற்கட்டமாக முகக்கவசங்கள் தயாரித்து வழங்க தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட ஆணை ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தில் மொத்தம் 3,58,04,139 முகக்கவசங்கள் ஊரகப்பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மேற்கண்ட சூழ்நிலையில் அனைத்து மாவட்ட ஊரகப் பகுதியில் உள்ள குடும்ப அட்டை எண்ணிக்கையில் 50 சதவீத அளவில் மட்டும் முகக் கவசங்களை வழங்க முடிவு செய்துள்ள நிலையில், பின்வரும் அட்டவணை விபரப்படி அனைத்து மாவட்டங்களில் ஊரகப்பகுதிகளில் பணிபுரியும் நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு 50 விழுக்காடு குடும்ப அட்டைகள் எண்ணிக்கைக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 50 பைசா வீதம் ஊக்கத் தொகையினையும் மேலும், செங்கல்பட்டு, கடலூர், சேலம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு முதல் தவணை முகக்கவசம் வழங்கப்படவில்லை என்பதால் மேற்படி நான்கு மாவட்டங்களுக்கு மட்டும் 25 சதவிகித குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 50 பைசா வீதம் ஊக்கத் தொகையினை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண் | மாவட்டங்கள் | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைகளில் 50 % எண்ணிக்கை விவரம் (செங்கல்பட்டு, கடலூர், திருவள்ளூர், சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு 25% எண்ணிக்கை) | முழுமை ஆக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைக்கு ரூ 0.50 வீதம் மொத்த ஊக்கத் தொகை விவரம் | மாவட்ட வாரியாக குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட வேண்டிய முழுமையாக்கப்பட்ட தொகை விவரம் (ரூ.) (Ronded off to nearest one rupee) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | **200** | **206586** | 103293 | 103293 | 51646.5 | 51647 |
| **2** | செங்கல்பட்டு | **344** | **286924** | **71731** | **71731** | **35865.5** | **35866** |
| 3 | கோயம்புத்தூர் | **199** | **326441** | 163220.5 | 163221 | 81610.5 | 81611 |
| **4** | கடலூர் | **683** | **520788** | **130197** | **130197** | **65098.5** | **65099** |
| 5 | தர்மபுரி | **292** | **368965** | 184482.5 | 184483 | 92241.5 | 92242 |
| 6 | திண்டுக்கல் | **306** | **413159** | 206579.5 | 206580 | 103290 | 103290 |
| 7 | ஈரோடு | **225** | **375679** | 187839.5 | 187840 | 93920 | 93920 |
| 8 | கள்ளக்குறிச்சி | **461** | **334425** | 167212.5 | 167213 | 83606.5 | 83607 |
| 9 | காஞ்சிபுரம் | **373** | **231801** | 115900.5 | 115901 | 57950.5 | 57951 |
| 10 | கன்னியாகுமரி | **114** | **197741** | 98870.5 | 98871 | 49435.5 | 49436 |

| வ. எண் | மாவட்டங்கள் | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைகளில் 50 % எண்ணிக்கை விவரம் (செங்கல்பட்டு, கடலூர், திருவள்ளூர், சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு 25% எண்ணிக்கை) | முழுமை ஆக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரம் | குடும்ப அட்டைக்கு ரூ 0.50 வீதம் மொத்த ஊக்கத் தொகை விவரம் | மாவட்ட வாரியாக குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட வேண்டிய முழுமையாக்கப்பட்ட தொகை விவரம் (ரூ.) (Ronded off to nearest one rupee) |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | கரூர் | 157 | 194870 | 97435 | 97435 | 48717.5 | 48718 |
| 12 | கிருஷ்ணகிரி | 316 | 394943 | 197471.5 | 197472 | 98736 | 98736 |
| 13 | மதுரை | 420 | 416258 | 208129 | 208129 | 104064.5 | 104065 |
| 14 | நாகப்பட்டினம் | 434 | 372189 | 186094.5 | 186095 | 93047.5 | 93048 |
| 15 | நாமக்கல் | 317 | 334086 | 167043 | 167043 | 83521.5 | 83522 |
| 16 | நீலகிரி | 34 | 94961 | 47480.5 | 47481 | 23740.5 | 23741 |
| 17 | சென்னை(வடக்கு) | 20 | 45989 | 22994.5 | 22995 | 11497.5 | 11498 |
| 18 | பெரம்பலூர் | 121 | 149711 | 74855.5 | 74856 | 37428 | 37428 |
| 19 | புதுக்கோட்டை | 489 | 373806 | 186903 | 186903 | 93451.5 | 93452 |
| 20 | இராமநாதபுரம் | 429 | 283311 | 141655.5 | 141656 | 70828 | 70828 |
| 21 | இராணிப்பேட்டை | 450 | 217524 | 108762 | 108762 | 54381 | 54381 |
| **22** | **சேலம்** | **385** | **585961** | **146490.25** | **146491** | **73245.5** | **73246** |
| 23 | சிவகங்கை | 445 | 279436 | 139718 | 139718 | 69859 | 69859 |
| 24 | சென்னை(தெற்கு) | 14 | 77592 | 38796 | 38796 | 19398 | 19398 |
| 25 | தென்காசி | 219 | 270315 | 135157.5 | 135158 | 67579 | 67579 |
| 26 | தஞ்சாவூர் | 640 | 465216 | 232608 | 232608 | 116304 | 116304 |
| 27 | தேனி | 119 | 193139 | 96569.5 | 96570 | 48285 | 48285 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 404 | 457581 | 228790.5 | 228791 | 114395.5 | 114396 |
| **29** | **திருவள்ளூர்** | **506** | **457244** | **114311** | **114311** | **57155.5** | **57156** |
| 30 | திருவண்ணாமலை | 860 | 621906 | 310953 | 310953 | 155476.5 | 155477 |
| 31 | திருவாரூர் | 430 | 296048 | 148024 | 148024 | 74012 | 74012 |
| 32 | திருநெல்வேலி | 201 | 224340 | 112170 | 112170 | 56085 | 56085 |
| 33 | திருப்பத்தூர் | 251 | 219572 | 109786 | 109786 | 54893 | 54893 |
| 34 | திருப்பூர் | 299 | 384625 | 192312.5 | 192313 | 96156.5 | 96157 |
| 35 | தூத்துக்குடி | 403 | 315214 | 157607 | 157607 | 78803.5 | 78804 |
| 36 | வேலூர் | 227 | 243577 | 121788.5 | 121789 | 60894.5 | 60895 |
| 37 | விழுப்புரம் | 688 | 485611 | 242805.5 | 242806 | 121403 | 121403 |
| 38 | விருதுநகர் | 450 | 361994 | 180997 | 180997 | 90498.5 | 90499 |
| | **மொத்தம்** | **12925** | **12079528** | **5577034.75** | **5577045** | **2788522.50** | **2788534** |

எனவே, ஊரகப் பகுதிகளில், மேற்படி முகக் கவசங்கள் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நியாயவிலைக் கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் 55,77,045 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் **ரூ.27,88,534/–ஐ (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து ஐநூற்றி முப்பத்தி நான்கு மட்டும்)** தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து கூட்டுறவுச் சங்களின் பதிவாளர், சென்னைஅவர்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை ஏற்று, ஊரகப் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் 1,20,79,528 குடும்ப அட்டைதாரர்களுக்கு 7,80,09,000 முகக் கவசங்கள் விநியோகம் செய்ய பார்வை 4–ல் காணும் அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 50 சதவீத அளவில் மட்டும் முகக் கவசங்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதால், அனைத்து மாவட்டங்களில் பணிபுரியும் நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு 50 விழுக்காடு குடும்ப அட்டைகள் வீதம் ஊக்கத் தொகையினையும், மேலும், செங்கல்பட்டு, கடலூர், சேலம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு முதல் தவணை முகக்கவசம் வழங்கப்படவில்லை என்பதால் மேற்படி நான்கு மாவட்டங்களுக்கு மட்டும் 25 சதவிகித குடும்ப அட்டைகள் வீதம், மேற்படி முகக் கவசங்கள் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நியாயவிலைக் கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவர்களுக்கும் சிறப்பு ஊக்கத்தொகையாக குடும்ப அட்டை ஒன்றுக்கு ரூ.0.50 வீதம், 55,77,045 குடும்ப அட்டைகளுக்கு மொத்தம் ரூ.27,88,534/– (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து ஐநூற்றி முப்பத்தி நான்கு மட்டும்) தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து கூட்டுறவுச் சங்களின் பதிவாளர், சென்னை அவர்களுக்கு வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.கு. எண்.45592/நிதி(வருவாய்)/2020, நாள் 09.12.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600009.
ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600005.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

**நகல்**

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, தலைமைச்
செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–600009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்